திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்

நகராட்சி அலுவலகம், புன்செய்ப் புளியம்பட்டி
நாள்.25.01.2023

அன்புடையீர் வணக்கம்,

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் சாதாரண கூட்டம் **திருவள்ளுவர் ஆண்டு 2053 சுறவம் (தை) மாதம் 11ம் நாள்**, 2023-ம் ஆண்டு **ஜனவரி மாதம் 25–ஆம் தேதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கூட்ட பொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

(தி.ஜனார்த்தனன்)

**பொருள் எண்.1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் AMRUT 2.0 திட்டத்தின் கீழ் ரூ.52.07 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு அரசாணை எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.09.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அரசாணை நிலை எண்.129, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC)துறை நாள்.23.09.2022ன் படி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| S.No | GOI Share 50% (Rs. In Crore) | GOTN Share 30% (Rs. In Crore) | ULB Share | |
|---|---|---|---|---|
| | | | KNMT Share 10% (Rs. In Crore) | SUIDF Share 10% (Rs. In Crore) |
| 1 | 26.04 | 15.62 | 5.20 | 5.20 |

அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.001/2022/DO1 நாள்.12.10.2022ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில், குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு 16.11.2022 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஆன்லைனில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உரை 16.11.2022 ஆம் தேதியன்றே திறக்கப்பட்டதில், இரண்டுமே தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து 02.12.2022 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உரை திறக்கப்பட்டு, மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கப்பட்டதில், VR WATER INFRA COMPANY, AVINASHI மதிப்பீட்டிற்கு மேல் 35.50% சதவீதம் கூடுதாலாகவும் மற்றும் KEYEM INFRA PROJECT PRIVATE LIMITED, CHENNAI மதிப்பீட்டிற்கு மேல் 45.93% சதவீதம் கூடுதாலாகவும் வழங்கப்பட்டதை தொடர்ந்து 02.12.2022 ஆம் தேதியன்று மதிப்பீட்டிற்கு மேல் கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தை குறைத்து தரக்கோரி VR WATER INFRA COMPANY, AVINASHI மற்றும் KEYEM INFRA PROJECT PRIVATE LIMITED, CHENNAI நிறுவனத்திற்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து VR WATER INFRA COMPANY, AVINASHI நிறுவனத்தின் 05.12.2022 ஆம் தேதிய விலை குறைப்பு கடிதத்தில் ஏற்கனவே மதிப்பீட்டிற்கு மேல் குறிப்பிட்டுள்ள 35.50%–லிருந்து குறைத்து மீண்டும் மதிப்பீட்டிற்கு மேல் 4.95% கூடுதலாக கொடுக்கப்பட்டதை குறைத்து தரக்கோரி 05.12.2022 ஆம் தேதியன்று 2–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

மேலும், மேற்கண்ட நிறுவனத்தின் 06.12.2022 ஆம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே மதிப்பீட்டிற்கு மேல் வழங்கிய 35.50% சதவீதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டிற்கு மேல் 4.95% வழங்கப்பட்டுள்ளதால் மீண்டும் விலை விகிதத்தை குறைத்து தர இயலாது என கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் மேற்படி விலைவிகிதத்தை 4.95% சதவீதத்திலிருந்து குறைத்து தரக்கோரி 07.12.2022 ஆம் தேதியன்று 3–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தின் 08.12.2022 ஆம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே குறைத்து மதிப்பீட்டிற்கு மேல் 4.95% வழங்கப்பட்டுள்ளதால் மீண்டும் விலை விகிதத்தை குறைத்து தர இயலாது என கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, இப்பணியின் மீது மேல்நடவடிக்கை தொடர தகுந்த அறிவுரை வழங்கி உதவுமாறு மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் வழியாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து 21.12.2022ஆம் தேதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அலுவலகத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின் படி ஒப்பந்ததாரருடன் நேராய்வு கூட்டம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர், மண்டல செயற்பொறியாளர், ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடத்தப்பட்டு விலை விகிதத்தை குறைத்துத்தர கோரப்பட்டதற்கினங்க 21.12.2022 ஆம் தேதியன்று 4–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்ததாரர் 4.95% லிருந்து 4.48% குறைத்துத்தர சம்மதித்து 22.12.2022 தேதியில் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், 05.01.2023 ஆம் தேதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அலுவலகத்தில் ஒப்பந்ததாரருடன் இரண்டாவது நேராய்வு கூட்டம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர், மண்டல செயற்பொறியாளர், ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடத்தப்பட்டு மீண்டும் விலை விகிதத்தை குறைத்துத்தர கோரப்பட்டதற்கினங்க, 26.12.2022 ஆம் தேதியன்று 5–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்ததாரர் 4.48% லிருந்து 4.40% குறைத்துத்தர சம்மதித்து 09.01.2023 தேதியில் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.அதனை தொடர்ந்து மீண்டும் மேற்படி விலைவிகிதத்தை 4.40% சதவீதத்திலிருந்து குறைத்து தரக்கோரி 20.01.2023 ஆம் தேதியன்று 6–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் 4.40% லிருந்து மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைத்து இப்பணியினை மேற்கொள்ள சம்மதித்து 20.01.2023 தேதி கடிதம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை இறுதியாக கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் திட்ட அபிவிருத் தி பணி | 5207.00 இலட்சம் (தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட தொகை) ஒப்பந்தபுள்ளி கோரப்பட்ட தொகை (ரூ.38,46,08,140.00) | VR WATER INFRA COMPANY, AVINASHI | 0.01% (மதிப்பீட்டு தொகை ரூ.38,45,69,870.68) மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | KEYEM INFRA PROJECT PRIVATE LIMITED, CHENNAI | 45.93% (மதிப்பீட்டு தொகை ரூ.56,12,68,058.51) மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.01% குறைவாக வழங்கியுள்ள VR WATER INFRA COMPANY, AVINASHI நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1299/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.2**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி SBM 2.0 திட்டத்தின் கீழ் வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் உள்ள குப்பைகளை (17460.00 MT) உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining) அகற்றுதல் பணி மேற்கொள்வதற்கு 06.01.2023 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line-ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 10.01.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகமாக குறிப்பிட்டதால் விலைவிகிதத்தை குறைத்து வழங்க அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து Shree Bommu Industries, Coimbatore நிறுவனத்தின் 11.01.2023 ஆம் தேதிய விலை குறைப்பு கடிதத்தில் ஏற்கனவே மதிப்பீட்டிற்கு மேல் குறிப்பிட்டுள்ள 4.84%லிருந்து குறைத்து மீண்டும் மதிப்பீட்டிற்கு மேல் 4.49% கூடுதலாக கொடுக்கப்பட்டதை குறைத்து தரக்கோரி 12.01.2023 ஆம் தேதியன்று 2–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

மேலும், மேற்கண்ட நிறுவனத்தின் 13.01.2023 ஆம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே மதிப்பீட்டிற்கு மேல் வழங்கியதை குறைத்து மதிப்பீட்டிற்கு மேல் 4.49% வழங்கப்பட்டுள்ளதால் மீண்டும் விலை விகிதத்தை குறைத்து தர இயலாது என கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் விலைவிகிதத்தை 4.49% சதவீதத்திலிருந்து குறைத்து தரக்கோரி 18.01.2023 ஆம் தேதியன்று 3–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தின் 19.01.2023 ஆம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே மதிப்பீட்டிற்கு மேல் வழங்கியதை குறைத்து மதிப்பீட்டிற்கு மேல் 4.49% வழங்கப்பட்டுள்ளதால், மீண்டும் விலை விகிதத்தை குறைத்து தர இயலாது என கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் மேற்படி விலைவிகிதத்தை 4.49% சதவீதத்திலிருந்து குறைத்து தரக்கோரி 19.01.2023 ஆம் தேதியன்றே 4–வது முறையாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தின் 20.01.2023 ஆம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே மதிப்பீட்டிற்கு மேல் வழங்கியதை குறைத்து மதிப்பீட்டிற்கு மேல் 4.49% வழங்கப்பட்டதை குறைத்து மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே இப்பணியை செய்து தருவதாக கடிதம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி– SBM 2.0 – வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் உள்ள குப்பைகளை (17460.00 MT) உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining) அகற்றுதல் பணி | 140.00 இலட்சம் | Shree Bommu Industries, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |
| | | | Green Fine Equipments, Coimbatore | 10.10% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே இப்பணியை செய்து தருவதாக கடிதம் வழங்கிய Shree Bommu Industries, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1241/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-2019ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான குரும்பபாளையம் கிராமம் சர்வே எண்.355/1–ல் புதிதாக 3TPD கொள்ளவு கொண்ட புதிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் பணிக்காக 03.01.2023 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line-ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 06.01.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான குரும்பபாளையம் கிராமம் சர்வே எண்.355/1–ல் புதிதாக 3TPD கொள்ளவு கொண்ட புதிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் பணி | 53.60 இலட்சம் | திருவாளர்.VBN Builders, திருப்பூர் | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திருவாளர்.Sri Bannari Amman Builders, கோபிசெட்டிபாளையம் | 1.66% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.VBN Builders, திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.397/2022/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**<u>பொருள் எண்.4</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக ஆறு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.01.2023 முதல் 31.01.2023 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.01.2023 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.02.2023 முதல் 28.02.2023 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.5</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.02.2023 முதல் 28.02.2023 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.6</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின்

செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் (01.01.2023 முதல் 31.01.2023 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.02.2023 முதல் 28.02.2023 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.7**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி SBM 2.0 திட்டத்தின் கீழ் வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் உள்ள குப்பைகளை (17460.00 MT) உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining) அகற்றுதல் பணி மேற்கொள்ள ஏதுவாக மேற்படி இடத்தில் புதிதாக மின் இணைப்பு பெறுவதற்கு ஆகும் செலவினத்தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1241/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.8**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தை சுற்றி படர்ந்துள்ள செடிகளை அகற்றுதல் மற்றும் குடியிருப்பு கட்டிடங்களில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1299/2020/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-2019ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான குரும்பபாளையம் கிராமம் சர்வே எண்.355/1–ல் புதிதாக 3TPD கொள்ளவு கொண்ட புதிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. எனவே மேற்படி இடத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும், புதிதாக மின் இணைப்பு பெறவும், மரம் நடுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.263/2018/இ1)**
**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.10</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 மற்றும் 13 ஆகிய பகுதிகளில் உப்பு தண்ணீர் விநியோக குழாய்கள் குறைந்த எண்ணிக்கையே உள்ளதால் உப்பு தண்ணீர் சீராக வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. மேற்கண்ட வார்டுகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் புதிதாக உப்பு தண்ணீர் விநியோக குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.11</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1, 12, 4, 10, 14 ஆகிய பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகளையும் தூர்வாரி சுத்தம் செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி SBM 2.0 திட்டத்தின் கீழ் வார்டு எண்.15 வாரச்சந்தை பகுதியில் புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது. மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தை சுற்றிலும் புதிதாக சுற்றுச்சுவர் அமைக்க ஆகும் செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.729/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.13</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் ஒரு சில இடங்களில் மின்மோட்டார் வைத்து குடிநீர் எடுப்பதால் அனைத்து குடியிருப்புகளுக்கும் சீரான குடிநீர் வருவதில்லை எனவும், மின்மோட்டார்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து மின்மோட்டார்கள் பறிமுதல் செய்து குடிநீர் சீராக கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என நகர வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களால் புகார் கூறப்பட்டுள்ளது. எனவே மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் எடுக்கும் இணைப்புகள் நகராட்சி மூலம் கண்டறியப்பட்டால் மின்மோட்டார்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்ட குடிநீர் இணைப்புகள் நிரந்தரமாக துண்டிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசு ஆணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ன்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படி உள்ள கடைகளுக்கு 30.12.2022 ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

நகராட்சியின் தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும், தற்போது உலகையே உலுக்கி வரும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை காரணமாக, பொது மக்களிடம் பணப்புழக்கம் இல்லாத காரணத்தினாலும், உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி மற்றும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள, கீழ்கண்ட விவரப்படி உள்ள நபர்களுக்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு ஆணை எண்.92 நாள்.03.07.2007–ன்படி மற்றும் ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கடையினை ஒப்படைக்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டவர்கள் பெயர்கள் | மாத வாடகையாக ஏலம் கோரிய தொகை | மாத வாடகையாக மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வியாக கோரியது ரூ. | எத்தனை யாவது ஏலம் |
|---|---|---|---|---|
| 1 | ஜவஹர் மெயின் ரோடு கடை எண்.27, அரசு மதிப்பு ரூ.17,135/– | | | |
| | திருமதி.பி.சுப்புலட்சுமி | 17,250/– | | 10வது ஏலம் |
| | திரு.ஆர்.பத்திரப்பன் | | 17,300/– | |
| 2 | பேருந்து நிலைய கடை எண்.16, அரசு மதிப்பு ரூ.21,954/– | | | |
| | திரு.ஆர்.வேணுகோபால் | 22,050/– | | 10வது ஏலம் |
| | திரு.வளன்அரசு | | 22,100/– | |

**(ந.க.எண்.785/2021/அ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்படி வரிசை எண்.01 முதல் 02 வரையுள்ள கடைகளுக்கு தொடர்ந்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நடத்தப்பட்டு வந்ததில் எவரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. இந்நிலையில் கடந்த 30.12.2022ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் மேற்கண்ட வரிசை எண்.01 மற்றும் 02 ஆகிய 2 கடைகளுக்கு தற்போது மறு ஏலத்தில் ஏலதாரர் கேட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை அரசு மதிப்பிற்கு குறையாமல் உள்ளதாலும், மேலும் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கவும் மேற்கண்ட 2 கடைகளின் ஏலதாரருக்கு ஏல உரிமம் வழங்கலாம்.
2) மேலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3) மேலும் மேற்கண்ட வரிசை எண்.1 மற்றும் 2 ஆகிய இண்டு கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் கொடுக்கவில்லை.
4) மீதமுள்ள 15 கடைகளுக்கு ஏலம் கோர எவரும் முன்வராததால், 15 கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பகுதிகளில் 15 பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் கட்டண கழிப்பிடங்கள் உள்ளன மற்றும் இவற்றை பயன்படுத்த முடியாத சில பயனாளிகள் தங்கள் வீட்டிலேயே அவர்களின் சொந்த இடத்தில் கட்டிக் கொள்ள வழங்கப்பட்ட விண்ணப்பத்தின் படி நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்கள் கடித ந.க.எண்.5990/2022/sbm நாள்.11/04/2022 தேதியில் தனிநபர் கழிப்பிடம் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டதின் பேரில் 2021–2022 மற்றும் 2022–2023 ஆகிய வருடங்களுக்கு தலா ஒரு வருடத்திற்கு 20 எண்ணிக்கை என்ற அடிப்படையில் மொத்தம் இரண்டு வருடத்திற்கு 40 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்டவாறு மாநில அரசு மற்றும் மத்திய அரசு மற்றும் நகராட்சியின் பங்களிப்பு தொகை கீழ்க்கண்டவாறு

| ஆண்டு | ஒரு பயனாளிகள் | மதிப்பீட்டு தொகை (ரூ.30000 / unit) | மத்திய அரசு வழங்கும்/ ஒரு பயனாளிகளின் பங்களிப்பு தொகை (ரூ) | மாநில அரசு வழங்கும்/ ஒரு பயனாளிகளின் பங்களிப்பு தொகை (ரூ) | நகராட்சியின் வழங்கும்/ ஒரு பயனாளிகளின் பங்களிப்பு தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 2021–2022 | 1 வீதம் | 30000/– | 4000/– | 2666/– | 2666/– |
| 2022–2023 | 1 வீதம் | 30000/– | 4000/– | 2666/– | 2666/– |

எனவே மேற்கூறியவாறு நகராட்சி பகுதிகளில் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு நகராட்சியின் பங்களிப்பு தொகையினை வழங்க பயனாளிகளுக்கு வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**ந.க.எண்: 1026/2022/H1**

**அலுவலககுறிப்பு:–**

அ) பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) முன் அனுமதி பெற்று, வழங்கியதிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.16**

இந்நகராட்சியில் பொதுநிதி 2022–23ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கழிவு நீர் வாகன எண்:TN 36 AZ 7382 வண்டிக்கு வருடாந்திர தகுதி சான்றிதழ் பெறும் பணிக்காக 10.10.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதப்பட்டியில் உரை 10.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
| --- | --- | --- | --- | --- |
| 1 | பொதுநிதி 2022-23 புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கழிவு நீர் வாகன எண்:TN 36 AZ 7382 வண்டிக்கு வருடாந்திர தகுதி சான்றிதழ் பெறும் பணி | 1.50 இலட்சம் | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | முருகன் ஆட்டோஸ் ஈரோடு | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக கொடுத்துள்ள **ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்: 1511/2022/எச்1)**

**அலுவலககுறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மன்றம் முன் அனுமதி பெற்று,பணி உத்தரவு வழங்கியது அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் எண்.17</u>

இந்நகராட்சியில் பொதுநிதி 2022-23ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் TATA ACE வாகன எண்:TN 36 X 3791 வண்டிக்கு வருடாந்திர தகுதி சான்றிதழ் பெறும் பணிக்காக 10.10.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதப்பட்டியில் உரை 10.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
| --- | --- | --- | --- | --- |
| 1 | பொதுநிதி 2022-23 புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் TATA ACE வாகன எண்:TN 36 X 3791 வண்டிக்கு வருடாந்திர தகுதி சான்றிதழ் பெறும் பணி | 1.00 இலட்சம் | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | முருகன் ஆட்டோஸ் ஈரோடு | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக கொடுத்துள்ள **ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்: 1510/2022/எச்1)**

**அலுவலககுறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மன்றம் முன் அனுமதியை எதிர்நோக்கி,பணி உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.18**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவகர் மெயின் ரோடு கடைகள், பேருந்து நிலைய கடைகள், எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள், வாரச்சந்தை வணிக வளாக குடோன் கடைகள், ஊராட்சி ஒன்றிய பழைய கடைகள், திரு.வி.க. திடல் வணிக வளாக கடைகள், சத்திரம் சாலை கிழக்கு பார்த்த கடைகள், சத்திரம் சாலை தெற்கு பார்த்த (அம்மா உணவகம் எதிரில்) உள்ள கடைகள், சத்திரம் சாலை வடக்கு பார்த்த (அம்மா உணவகம் அருகில்) உள்ள கடைகள், மறைமலையடிகள் தெரு வணிக கடைகள் என அனைத்து கடைகளிலும் நகராட்சியால் கட்டிடம் கட்டி குத்தகைக்கு விடப்பட்ட நிலையில், மேற்படி இடத்திற்கு மேலாக அவரவர்கள் குத்தகை எடுத்த கடையின் அளவினை விட கூடுதலாக கடையின் முன் அட்டையால் மேல் கூரை போடப்பட்டும் மற்றும் இதர இரும்பு தகடுகள், இரும்பு கிரில் கொண்டும் மறைவு ஏற்படுத்தப்பட்டும் கடைகளை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் மற்றும் அருகருகாமையில் உள்ள கடைகளுக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகிறன்றனர்.

மேலும், மேற்படி கடைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளால் வியாபாரம் பாதிப்பு ஏற்படுகிறது எனவும், ஆக்கிரமிப்புகளை அகற்றினால் மட்டுமே வாடகை செலுத்த இயலும் எனவும் அருகருகாமையில் உள்ள கடை குத்தகைதாரர்களால் கோரிக்கை தெரிவித்து வந்துள்ளனர். மேலும் ஆக்கிரமிப்புகளால் சாலையின் அகலம் குறைந்து போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

எனவே புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கடைகளும் ஒப்படைக்கப்பட்ட அளவினை விட கூடுதலாக மேற்கூரை, மற்றும் இதர சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும், கடை குத்தகைதாரர்களுக்கு வாடகை செலுத்தவும் வழிவகை செய்ய சட்ட ஒழுங்கு பிரச்சனை எழாமல் பாதுகாக்க காவல்துறை மற்றும் மின்வாரியத்துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்காகவும், மேலும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.108/2023/அ1)

**அலுவலக குறிப்பு :**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கடைகளின் முன்பு உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், அதற்கான உத்தேச செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.19**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்: 33552/2022/EA-SWM-4, நாள்.10.01.2023–ன்படி இந்நகரில் உள்ள 18 வார்டுகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுனங்கள் போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் முதல் நிலை சேகரம் செய்யும் பணியினை மேற்கொள்ள 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த சேவை வழங்குநரை தேர்வு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியின் நிரந்தர பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள இருக்கும் பணிகளான சாக்கடை சுத்தம் செய்தல், தெருக்கள் மற்றும் சாலைகளை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், வாரச்சந்தை ,தினசரி சந்தை போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை சேகரித்தல் , நுண் உர மையம், வளமீட்பு மையம் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட உள்ள திடக்கழிவு மேலாண்மை பணிக்களுக்கு தேவையான வாகனங்கள் போக மீதம்முள்ள வாகனங்ளை ஒப்பந்ததாரருக்கு வாடகை அடிப்படையில் வழங்கி பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சியில் உள்ள நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மற்றும் வாகனங்ளை பின்வரும் விவரப்படி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

| பணியின் விவரம் | ஈடுபடுத்த வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை | ஈடுபடுத்த வேண்டிய வாகனங்களின் விவரம் |
|---|---|---|
| நுண் உரக் கூடங்கள் மேற்கொள்ப்படும் பணிகள் | 5 பணியாளர்கள் | – |
| வள மீட்பு மையம் | 3 பணியாளர்கள் | |
| பேருந்து நிலையம் | 4 பணியாளர்கள் | HCV-1 |
| மார்க்கெட் (ம) சந்தை | 6 பணியாளர்கள் | |
| புல் செடிகள் அகற்றும் பணி | 4 பணியாளர்கள் | |
| சாக்கடை சுத்தம் செய்தல் | 3 பணியாளர்கள் | LCV- |
| பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் | 4 பணியாளர்கள் | - |
| தெருக்கள் மற்றும் சாலைகள் சுத்தம் செய்தல் | 4 பணியாளர்கள் | LCV -1 |
| மொத்தம் | 32 பணியாளர்கள் | LCV -2<br>HCV-1 |

அதன் விவரம் பின்வருமாறு:

ஒப்பந்த அடிப்படையில் முதல் நிலை சேகரம் செய்யும் பணிக்கு ஆகும். செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பின்வரும் விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் விபரம்:

| Quantity of waste Generated (TPD) | Rate Per Tonne (in Rs.) | Estimated Base Cost per day (Rs.In Lakh) | Estimated Base Cost per year (Rs.In Lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs.In Lakh) | Estimated total cost per year (Rs.In Lakh) |
|---|---|---|---|---|---|
| 7.28 | 5201 | 0.38 | 138.70 | 26.35 | 165.05 |

தினமும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முதல்நிலை சேகரத்தில் இந்நகராட்சியில் 7.28 டன் திடக்கழிவுகள் உருவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், திடக்கழிவுகள் டன் ஒன்று சேகரித்து ஒப்படைக்க ரூ.5201.00/– வீதம் வழங்கிடவும், ஆண்டு ஒன்றுக்கு GST உட்பட ஆகும் செலவினம் ரூ.165.05/– இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

**சேவை வழங்குநர் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய பணிகளின் விபரம்:**

| | **பணியின் விபரம்** | **எண்ணிக்கை** | **பணியாளர்கள் எண்ணிக்கை (as per KPI indicators)** | **வாகனங்கள் எண்ணிக்கை (as per KPI indicators** | **ஓட்டுநர்கள் எண்ணிக்கை (as per KPI indicators** |
|---|---|---|---|---|---|
| | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் ,மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து தள்ளுவண்டியில் சேகரிக்கும் பணி | 774 வீடுகள் | 05 பணியாளர்கள் | 05 Pushcarts | – |
| | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் ,மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து BOV வாகனங்கள் மூலம் சேகரிக்கு பணி | 5415 வீடுகள் | 26 பணியாளர்கள் | 13 BOV’s | – |
| | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் ,மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து LCVவாகனங்கள் மூலம் சேகரிக்கு பணி | 1547 வீடுகள் | 04 பணியாளர்கள் | 02 LCV’s | 2 ஓட்டுநர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சிறு வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து LCVவாகனங்கள் மூலம் சேகரிக்கு பணி | 544 சிறு வணிக நிறுவனங்கள் | 04 பணியாளர்கள் | 02 LCV's | 2 ஓட்டுநர்கள் |
| | பெரு வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து HCVவாகனம் மூலம் சேகரிக்கு பணி | 815 பெரும் வணிக நிறுவனங்கள் | 04 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் |

மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிகளுக்கு தேவையான வாகனங்களில் 05 தள்ளுவண்டிகள், 13 BOV வாகனங்கள் மற்றும் LCV-2,HCV-1,வாகனம் வாடகை அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு இந்நகராட்சியில் இருந்து வழங்கவும்,அதற்கான நாள் வாடகை முறையே தள்ளுவண்டிக்கு ரூ.10/– , BOV வாகனத்திற்கு ரூ.100/–, LCV வாகனத்திற்கு ரூ.200/– மற்றும் HCV வாகனத்திற்கு ரூ.400/– என்னும் விலைவிகித அடிப்படையில் ஒப்பந்ததாரரின் மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளவும், இதர வாகனங்கள் மற்றும் அதற்கான 5–ஓட்டுநர்கள் மற்றும் 3–மேற்பார்வையாளர்களை ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் அமர்த்தி கொள்ளும் வகையிலும், இப்பணியினை ஒப்பந்தபுள்ளி கோரி தகுந்த ஒப்பந்ததாரரை தேர்வு செய்து 01.04.2023 ஆம் தேதி முதல் ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1316/2022/எச்1)

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ,நகராட்சி பொது நிதி பற்றாக்குறை ஏற்படும் நேர்வுகளில் அரசால் வழங்கப்படும் 15வது CFC , SWM TIED GRANT இல் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
3) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்: 33552/2022/EA-SWM-4, நாள்.10.01.2023 கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**இப்படிக்கு**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**